உ

கடவுள் துணை.

சேஷயோகிசெய்த

# ஞானயேத்தம்.



சென்னை சூளை
நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

1923

உ

கடவுள் துணை.

# ஞான வெத்தம்.

பிள்ளையாரும்வாரீர்
பிள்ளையாருமங்கே

பெருத்தமூலாதாரஞ்
சிருத்தவிதழ்நாலா

மூலைத்தகம்பமாகி
ஓங்கியுச்சிதொட்டு
தாங்கியேதின்கீழாம்
தாணிரண்டதாகி
தங்கியேவாயுவாறு
அங்கியேகடந்து
சங்கிலிபிளந்து
சமத்தவாயுவாறு
விங்கிதுவரைத்தே
விரண்டுடனேவாரி
இன்னமதின்மேலே
வன்னமதைச்சொல்வேன்

அன்னத்துக்குராசன்
ஆயன் சரஸ்வதியாம்
நயந்தவிதழாரும்
நல்லநிறப்பொன்னு

நகாரமேயெழுத்தாம்
விகாரங்கெந்தாகு
முத்திதக்ககாதா
மூனுடனேவாரீ
மோசம்பண்ணமாயன்
வாசமணிபூரம்
நேசலட்சுமியாம்
வீசம்பத்திதழும்
ஒம்வெழுத்தாம்
தேசமேவெளுப்பாம்
ஆறுசுவையாலே
நடுவேதேயுவீடாம்
நாலுடனேவாரீ
நாலுமெட்டுமழும்
நல்லசெம்புமேனி
எல்லோருத்திரனும்
தொல்லைமுழிப்பார்வை
சொல்லுமேசிகாரம்

அல்லதுண்டுயின்னம்
ஐந்துடனேவாரீ
நெஞ்சில்லெழுத்தாங்
கொஞ்சியமயேசன்

மிஞ்சிமறுகோணம்
மேனிகறுப்பாமே
தன்னிதழைப்பார்க்கில்
தனியேபதினாறும்

முனிந்தவேலேஓடல்
லந்தரங்சஞ்சொல்வேன்
ஆருடனேவாரீ
கூறுவேனுனுங்கள

குருவிருந்தநேர்மை
யருகிருந்தபூசம்
மமச்சவல்லோவத்தா
னென்னவென்றுசொல்வே

னேழுடனேவாரீ
தாழசொன்னபேச்சு
சத்தியங்காணத்தா
யேழைசொன்னபேச்சு

எட்டுடனேவாரீ
எட்டுசாணுடம்பு

கட்டையைநம்பாதே
ஒன்றல்லவோதெய்வம்

ஒருவதியாலெட்டாம்
ஊமையெழுத்தாலே

ஓங்காரமுண்டாச்சு
ஓங்காரத்தினாலே

உண்டாச்சுதுலோகம்
யிதுவுங்குருவாலே
இருவதியாலெட்டாம்
எரைக்குரெண்டேத்தம்

சரக்குமேழைநாலாம்
முந்திகுருபாதம்
முப்பதியாலெட்டாம்
முப்பாழுங்கடந்து
வப்பாலேநடந்தால்
வப்பாலேயிருந்த

வதிசயம்பார்த்தான்
னல்லகுருபாதம்
நாற்பதியாலெட்டாம்
நாலுமேலேகுண்டம்
நடுவெழுந்ததூணும்
படுமுதலில்ரெண்டாம்

படுமுதல்பிடுங்கி
பருத்தமரமேறி
குருத்தில்கள்ளிறக்கி
கூசாமற்குடித்தாற்
பேசாதேபிறகு
அஞ்சாதேநீபத்தன்
ஐன்பதியாலெட்டாம்
மஞ்சல்லவே பூதம்
பிஞ்சல்லவோவேழுத்து
வஞ்சொடுங்கும்போது
நெஞ்சடங்குமத்தான்
நாருமுகமல்லோ
அறுவதியாலெட்டாம்
மாரல்லோசுரூபம்
வேறல்லோசுரூபம்
வேறறிந்தபேர்க்கு
ஆரமில்லையத்தான்
என்னவென்றுசொல்லே
னெழுவதியாலெட்டாம்
யேழல்லவோனடி
வாழின்பத்துநாடி
பாழல்லவோநானும்

பாழ்கடந்தபேர்க்கு
பத்துகோடிதெண்டன்
என்னவென்றுசொலுவேன்
எண்பதியாலெட்டாம்
எண்ணிக்கையறிந்து
கண்ணப்பனைக்கண்டு
தின்னப்பாபழத்தை
குண்ணப்பாவருமை
விண்ணப்பாமுரைத்து
கண்ணப்பாகுருவை
சொன்னதபசாரம்
தொண்ணூருடலெட்டாம்
மண்ணில்வெகுதூரம்
குண்ணறிந்தபேரை
யெண்ணறிந்தநாடி
எகமனதாகி
பாகமுமறிந்து
நாகத்தையெழுப்பி
வீகத்தைத்துறந்து
போகத்தேநடத்தி
போகத்தேநடந்தால்
தாகத்தேநிறுத்தும்

சோதியறிந்தோர்க்கு
தூரமல்லையத்தான்

சாதிகுலமில்லை
சற்குருவிருந்தால்

நித்தியமிதுவே
பத்தியாய்ப்பணிந்தால்

முத்திதருமத்தான்
வாமநெடுசிவன்

ராமயோகிதந்த
ராஜயோகிசேஷன்

சாதனருளாலே
பாசமரச்சொன்னேன்

பிரியாமலேயத்தான்
பிள்ளையாரேவாரீர்

ஞானயேத்தம்-முற்றிற்று.

---